




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை திறந்து வைத்தார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், வேலூர் மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார். பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா. சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களுக்குட்பட்ட கிராமங்களில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அடையாளமாக 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூரில் அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (25.6.2025) வேலை வேண்டி மனு அளித்த கூலித் தொழிலாளி திருமதி. பொற்செல்விக்கு, அவரது ஏழ்மை நிலையை கருதி உடனடியாக காட்பாடி அன்னை சத்யா காப்பகத்தில் விடுதிக் காவலர் பணிக்கான பணி நியமன ஆணையினை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கோவி.செழியன்- மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலை! நந்தனம் கி.மதி- எஸ்.முரளி வரவேற்புரை!

# டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் மயிலை சி.தசரதன் இல்ல மணவிழா!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.- முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, ஜூன் 26-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தலைமை செயற்குழு உறுப்பினர் மயிலை சி. தசரதன்- - கமலாவதி ஆகியோரின் புதல்வர் - டி.சந்தன் - -எஸ்.சுபாஷீனி ஆகியோரின் மணவிழா(2.7.2025- புதன்கிழமை) அன்று காலை 9.10 மணிக்கு சென்னை, திருவொற்றியூர், தேரடி, வடக்கு மாடவீதி, திருமதி புஷ்பம் பழனிச்சாமி திருமண மாளிகையில் (டி.கே.பி.) நடைபெறுகின்றது.



மணவிழாவிற்கு கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் தலைமை ஏற்று மணவிழாவினை நடத்தி வைத்து மணமக்கள் டி.சந்தன் - எஸ்.சுபாஷினி ஆகியோரை வாழ்த்துகிறார்.

மணவிழாவிற்கு உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், சென்னை வட கிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மயிலை பகுதிச் செயலாளர்கள் நந்தனம் மதி, எஸ்.முரளி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

இம்மணவிழாவில் சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை தா.வேலு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்பட கழக முன்னணியினர் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

முன்னதாக (1.7.2025- செவ்வாய்க்கிழமை ) அன்று மாலை 6.30 மணிக்கு மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

மயிலை சி.தசரதன் நன்றி கூறுகிறார்.

### பெரியார் - அண்ணாவை விமர்சித்த மேடையில் எடப்பாடி!

# அ.தி.மு.க.வா அல்லது அமித்ஷா அ.தி.மு.க.வா?

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

அரியலூர், ஜூன் 26-

அதி.மு.க. என்பது அமித்ஷாவுக்கு கட்டுப்பட்ட அ.தி.மு.க.வாக மாறிவிட்டது. அதனால் தான் திராவிட இயக்க தலைவர்கள், பெரியார், அண்ணா ஆகியோரை விமர்சிக்கும் மேடையில் அமரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் பேட்டியில் கூறியுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்ட மேடையில் எடப்பாடி பழனிச்சாமியை பேச



விடாது, அமித்ஷா மட்டும் பேசி கூட்டணியை அறிவித்தார். எடப்பாடி பழனிச்சாமி எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்கும் மௌன சாட்சியாக அமர்ந்திருந்தார்.

எப்போதும் திராவிட இயக்கத்தினர் என்று சொல்லிக் கொள்பவர்கள், நடந்த சம்பவத்தை குறித்து இதுவரை வாய் திறக்கவில்லை. இது ஒரு மிகுந்த அவமானகரமாக சம்பவமாக உள்ளது.

இது மெல்ல மெல்ல அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறி வருவதை காட்டுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. பெண்களின் வாழ்க்கையின் விடுதலை திட்டமாக செயல்படுகிறது. அதிலும் மிக குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணத் திட்டம் பெண்களின் வாழ்க்கையின் ஒளி வீசும் திட்டமாக செயல்படுகிறது. தமிழ்நாட்டு பெண்கள் மிகவும் மகிழ்ச்சிஅயாக தங்களது சொந்தக் காலில் நின்று வாழ்க்கை பயணத்தை மிக சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் பேசினார்.